# மனித உரிமைகளை ஆவணப்படுத்தல் கையேடு

அடையாளம்

கொள்கை ஆய்வுக்கான நிலையம்

# மனித உரிமைகளை ஆவணப்படுத்தல் கையேடு

அடையாளம்

கொள்கை ஆய்வுக்கான நிலையம்

வெளியீடு : அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்
பதிப்பு : ஜனவரி 2017, யாழ்ப்பாணம்.
பக்கம் : iv + 38
உரிமை : CC BY ND

**தொடர்புகளுக்கு :**
அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்,
49, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3132
மின்னஞ்சல் : info@adayaalam.org

# நன்றி

அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையமானது ஒக்டோபர் 17-21 வரை யாழ்ப்பாணத்தில் "நிலைமாறுகால நீதிச் சூழ்நிலையில் மனித உரிமை ஆவணப்படுத்தல் மற்றும் ஆவணக்காப்பு" என்ற தலைப்பில் ஒழுங்கு செய்திருந்த பயிற்சிப்பட்டறையில் வளவாளராக பங்குபற்றி, இக்கையேட்டுக்குரிய மூல வளங்களையும், ஆராய்ச்சி தரவுகளையும் வழங்கிய தென்னாபிரிக்க வரலாற்று ஆவணக்கப்பாகத்தின் (South African History Archives- SAHA) பணிப்பாளரான திருமதி கத்தரின் கென்னடி அவர்களுக்கு தன் முதற்கண் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது. இக் கையேடு எமது முதுநிலை ஆய்வாளர் தர்சா ஜெகதீஸ்வரனால் தொகுக்கப்பட்டது.

இப்பட்டறையில் பங்குபற்றி தமது உள்ளீடுகளையும், பின்னூட்டங்களையும் வழங்கி இக்கையேட்டின் உள்ளடக்கங்கள் உருவெடுக்க துணை புரிந்த செயற்பாட்டார்களுக்கும் அடையாளம் தனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

மேலும், இக்கையேட்டை ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழியில் மொழிபெயர்த்த எமது முதுநிலை ஆய்வாளா கஜன் மகேந்திரா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இறுதியாக, இந்த பயிற்சிப் பட்டறை மற்றும் இக்கையேடு உருவாக்க நிதி மூலதனம் வழங்கி உதவிய சுவிஸ் தூதுவராலயத்திற்கு நமது நன்றிகள்.

# உள்ளடக்கம்


I. மனித உரிமை ஆவணப்படுத்தல் என்றால் என்ன? 1

II. கடந்த காலத்தை கையாளல் கோட்பாட்டின் நோக்கு நிலையிலிருந்து ஆவணப்படுத்தலின் தேவை என்ன? 4

III. எதனை ஆவணப்படுத்தல் என தீர்மானித்தல் 11

IV. ஆவணப்படுத்தும் தகவலின் வகைகளும் மூலங்களும் 16

V. தகவல் சேகரிப்பின் அடிப்படை கோட்பாடுகள் 19

VI. தகவலின் தரத்தையும் நம்பகத் தன்மையையும் உறுதிப்படுத்தல் 26

VII. பாதுகாப்பு

a. அச்சுறுத்தல்களை மதிப்பிடுதல் 29

b. தகவல்களையும் தகவல் மூலங்களையும் பாதுகாப்பதற் கான உத்திகள் 32

VIII. வேறு நிறுவனங்களோடு ஆவணப்படுத்தலை ஒருங்கிணைத்தல் 36

பிற்சேர்க்கை

## I. மனித உரிமை ஆவணப்படுத்தல் என்றால் என்ன?

தனி நபர்களின் மனித உரிமைகள் மீறப்படும்போது அவற்றை மதிப்பிடுவதற்கும், மனித உரிமை நிலவரத்தினையும், அமைவையும், பரிணாமத்தையும் ஆராய்வதற்கும் தேவையான தகவல் சேகரிப்பு செயன்முறையே மனித உரிமை ஆவணப்படுத்தல் ஆகும். எந்த வகையான தகவலை எவ்வாறு ஆவணப்படுத்தல் என்பதனை அடையாளங்காணல், அடையாளங்காணப்பட்ட தகவலை திரட்டுதல் மற்றும் சேகரித்தல், திரட்டிய தகவலை உரிய வடிவில் உரிய முறையில் ஒழுங்கமைத்தல் மற்றும் பேணுதல் ஆகிய படிமுறைகளை மனித உரிமை ஆவணப்படுத்தல் உள்ளடக்கியிருக்கும்[1].

"கண்காணித்தல், ஆவணப்படுத்தல், அறிவித்தல்" (Monitoring, Documentation, Reporting- MDR) செயன்முறையின் ஒரு கூறே ஆவணப்படுத்தல் ஆகும். ஆவணப்படுத்தல் என்பது "ஒழுங்குமுறை மற்றும் நடப்பு சார் தகவல் சேகரிப்பு, சேகரிக் கப்பட்ட தகவல்களின் நுண் ஆராய்ச்சி, மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான இத்தகவல்கள் உடனுக்குடன் உபயோகிக்கக் கூடிய முறையில் சம்பந்தப்பட்டவரிடம் கொண்டு சேர்க்கப்படல்" என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது[2].

இந்தக் கையேடானது இலங்கையின் நிலைமாறுகால நீதி என்ற பரந்த செயன்முறையின் ஒரு அங்கமாக ஆவணப்படுத்தலை நோக்கும். இந்த நோக்குநிலையில் இருந்து ஆவணப்படுத்தலானது ஒரு செயல்நிலை MDR அமைப்புமுறையின் ("கண்காணித்தல்,

---

[1].இந்த வரைவிலக்கணம் "Human Rights Documentation Toolkit", Public International Law and Policy Group (2016): <http://www.hrdtoolkit.org/terminology/> ["PILPG, 2016"]; மற்றும் "Human Rights Monitors' Guidebook", Search for Common Ground (2014), Nigeria : <https://www.sfcg.org/wp-content/uploads/2014/12/HUMAN-RIGHTS-MONITORS%E2%80%99-GUIDE-BOOK_final_with-cover.pdf> ["SCFG, 2014"] ஆகிய ஆவணங்களில் மேற்கோள் காட்டப்பட்ட ஆவணப்படுத்தலின் வரைவிலக்கணங்கள் என சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களில் இருந்து தருவிக்கப்பட்டது.

[2].SCFG, 2014

ஆவணப்படுத்தல், அறிவித்தல்") அங்கமாகவோ அல்லது உத்தேசிக்கப்பட்ட ஒரு MDR செயன்முறைக்கானதாகவோ இருக்கலாம்.

**நிலைமாறுகால நீதி சூழலில் மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலில் காணப்படும் கொள்கை ரீதியான முரண்கள்**

நிலைமாறுகால நீதி சூழலில் மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலில் காணப்படும் சில கொள்கை ரீதியான முரண்களை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அறிந்திருத்தல் அவசியம்.

1. **ஐ.நா/உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற**

   நிலைமாறுகால நீதி சூழலில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சிவில் சமூக அமைப்புகள் உத்தியோகபூர்வமற்ற விசாரணைகளை மேற்கொள்வதை பற்றியும் அவ்விசாரணைகளின் முக்கியத்துவம் மற்றும் நம்பகத்தன்மை பற்றியும் உலகளாவிய ரீதியில் இன்று உரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. ஐ.நா அல்லது உத்தியோகபூர்வமான விசாரணைகளை மேற்கொள்ளும் சிறப்புப் பயிற்சி பெற்ற, அனுபவம் மிக்க நிபுணர்களை மாற்றீடு செய்ய முடியாது என ஒரு சாரார் வாதிட, சிவில் சமூக "உத்தியோகபூர்வமற்ற" விசாரணைகள் உத்தியோகபூர்வமான விசாரணைகளின் போது எழாத பல விடயங்களை வெளிக்கொணரும் எனவும் இவ்விசாரணைகளை புறந்தள்ள முடியாது என இன்னொரு சாராரும் வாதிடுகின்றனர்.

2. **'சாட்சி' மற்றும் 'தகவல்'**

   வழமையாக, எவ்வகையான மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தல்கள் நீதிமன்றத்தில் சாட்சியமாக சமர்ப்பிக்கப்படலாம் என மிகவும் குறுகிய, குறிப்பான

வரையறைகள் காணப்படும் (அது சர்வதேச, கலப்பு அல்லது உள்நாட்டு நீதிமன்றமாக இருக்கலாம்). இந்நிலையில் சாட்சியமாக சமர்ப்பிப்பதற்காக மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தலுக்கும் பரந்துபட்ட உண்மைகளை கண்டறிவதற்காக அவற்றை ஆவணப்படுத்தலுக்கும் இடையில் முரண்கள் எழுகின்றன.

*"சாட்சியப்படுத்துவதற்கான கட்டாயத்தின் சுமை ஏனைய உண்மைகள் பதிவு செய்யப்படுவதை மட்டுப்படுத்தும்"- கத்தரின் கென்னடி (தென்னாபிரிக்க வரலாற்று ஆவணக் காப்பகம்- SAHA)*

3. **உண்மை**


உண்மை என்பது *"சர்வ சாதாரணமாக பிரயோகிக்கப்பட்டு வரும் பதமாக இருப்பதால், வரலாற்றுக் குற்றங்களை நிவர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவோருக்கும், அச்செயன்முறைகளில் ஈடுபடுவோருக்கும் அது ஒரு வெளிப்படையான எண்ணக்கருவாக தோன்றினாலும், "நீதி", "நல்லிணக்கம்" போன்றே அதுவும் உறுதியான விளக்கம் வழங்க முடியாத ஒரு எண்ணக்கருவாகும்."*- Parlevliet

உண்மைகள் மறைக்கப்பட்டும், தெளிவற்றும் காணப்படும் காரணத்தினாலேயே நிலைமாறுகால நீதி சூழலில் அவற்றை தேட வேண்டிய நிலை உருவாகின்றது. இதனால் எது உண்மை என்பதை தீர்மானிப்பதில் சிரமங்கள் ஏற்படலாம்

## II கடந்த காலத்தை கையாளல் கோட்பாட்டின் நோக்கு நிலையிலிருந்து ஆவணப்படுத்தலின் தேவை என்ன?

சர்வேதேச ரீதியாக "கடந்த காலத்தை கையாளல்" (Dealing With the Past- DWP) எனும் கோட்பாடு நான்கு பிரதான தூண்களை கொண்டிருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது:

- அறிந்து கொள்வதற்கான உரிமை
- நீதி பெற்றுக் கொள்வதற்கான உரிமை
- மீள் நிகழாமைக்கான உத்தரவாதம்
- இழப்பீட்டிற்கான உரிமை




ஆவணப்படுத்தலானது வழமையாக "அறிந்து கொள்வதற்கான உரிமை" எனும் தூணின் அங்கமாகக் கருதப்பட்டாலும் அது

உண்மையில் "கடந்த காலத்தை கையாளல்" கோட்பாட்டின் எல்லா தூண்களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. எனவே சிவில் சமூகங்களின் செயற்திறனுடைய மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலானது "கடந்த காலத்தை கையாளல்" கோட்பாட்டின் நான்கு தூண்களினதும் விருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் முக்கிய பங்கு வகிக்கும்.

ஆவணப்படுத்தலானது பின்வரும் குறிக்கோள்களை பூர்த்தி செய்ய உதவும்:

- பொறுப்புக்கூறலை மேம்படுத்தல்.
- சாட்சியங்களை பேணுவதினூடாக குற்றவியல் செயன்முறைகளுக்கும் நீதியைப் பெற்றுக் கொள்வதற்கும் துணை புரிதல்.
- வரலாற்று நினைவுகளை தக்கவைக்க உதவுதல்.
- அறிந்து கொள்வதற்கான உரிமையை சாத்தியப்படுத்தலும் உறுதிப்படுத்தலும்.
- பொருளாதார மற்றும் அரசியல் பலம் பொருந்திய மக்கள் கூட்டத்தின் வரலாறுகளையும் அனுபவங்களையும் மாத்திரமின்றி, ஒரு சமூகத்தின் பொருளாதார, அரசியல், சமூக படிநிலைகளுக்கு அப்பால் வரலாறுகளையும், அனுபவங்களையும் பேணி அவற்றின் பல்வகைமையை உறுதிசெய்தல்.
- நினைவுகூரலை ஏதுவாக்கி, உறுதி செய்து நினைவு கூரும் பணிகளை ஊக்குவித்தல்[3]

"உத்தியோகபூர்வ" விசாரணைகளையோ, கட்டமைப்புக்களையோ போலன்றி சிவில் சமூக அமைப்புக்களால் அந்த உத்தியோகபூர்வ கட்டமைப்புக்கள் உருவாக்கப்படும் என்ற உத்தேசத்தில்

---

[3]Grace Lile, WITNESS <https://witness.org> ; SAHA Reconstructing Historical Memory Toolkit <http://www.saha.org.za/>

ஆவணப்படுத்தல் திட்டங்கள் முன்னெடுக்கப்படலாம். இதனால் அந்த உத்தியோகபூர்வ கட்டமைப்புக்கள் உருவாக்கப்படுவதிலும் இவை செல்வாக்கு செலுத்த முடியும்.

உத்தியோகபூர்வ "கடந்த காலத்தை கையாளல்" கோட்பாட்டின் கட்டமைப்புக்கள் இன்னும் உருவாக்கப்படாதவிடத்து அவை உருவாக்கப்படும் எனும் உத்தேசத்தில் சிவில் சமூக அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தல் பொறிமுறைகள் சில கீழ்வருமாறு:

- ND – Burma - இது பல அரச சார்பற்ற அமைப்புக்கள் கூட்டாக செயல்படுத்தும் மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தும் பொறிமுறையாகும். இந்த அரச சார்பற்ற அமைப்புக்களின் வலையமைப்பானது Martus எனும் தொழில்நுட்ப கருவியைப் பிரயோகித்து மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தரப்படுத்தப்பட்ட தகவல்களை சேகரித்து, அவற்றினடிப்படையில் அறிக்கைகள் தயாரித்து, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கூட்டாக பரிந்து பேசும் செயன்முறைகளில் ஈடுபடுவர். இது மியான்மரில் நிலைமாறுகால நீதி சூழல் உருவாகும் எனும் உத்தேசத்திலும், அவ்வாறு உருவாகும் இடத்து உண்மைகளைக் கண்டறியும் கட்டமைப்பொன்றை அரசு நிறுவ வேண்டும் என்று அரசின் மீது அழுத்தம் பிரயோகிக்கவும் உருவாக்கப்பட்டுள்ள "உத்தியோகபூர்வமற்ற" ஆவணப்படுத்தல் பொறிமுறையாகும்.
- Syria Tracker - இது சிரியாவில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மக்கள் வழங்கும் அறிக்கைகளைத் தொகுத்து அவற்றை கென்யாவைத் தளமாக கொண்ட உஸஹிதி (Ushahidi) மென்பொருளை துணையாகக் கொண்டு வரைபடங்களில் பதியும் பொறிமுறை. இதுவரை ஏறத்தாழ 4500 அறிக்கைகள் இவ்வாறு பதியப்பட்டுள்ளன. சிரியாவுக்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று உருவாகும்போது இவ்வாவணப்படுத்தல் பொறிமுறை பாதிக்கப்பட்டோர்

ஒவ்வொருவரினதும் பெயர், இருப்பிடம் போன்ற தகவல்களை அப்பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கு வழங்க உத்தேசித்துள்ளது.

- Guatemalan Forensic Anthropology Foundation (FAFG) - குவாதமாலாவின் தடயவியல், மானுடவியல் நிதியம் - இது வரலாற்று குற்றங்களை ஆவணப்படுத்துவதன் மூலமும், அவற்றை விசாரணை செய்வதன் மூலமும் நீதித் துறையை பலப்படுவதிலும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கும் பங்களிப்பு செய்யும் இலாபம் ஈட்டும் நோக்கில்லாத விஞ்ஞான தொழில்நுட்ப அமைப்பாகும். முன்னைய படைத்தளமொன்றின் அகழ்வாராய்ச்சியின் போது இவ்வமைப்பு வெளிக்கொணரந்த சாட்சியங்கள் 8 முன்னாள் இராணுவ தளபதிகளை குற்றவியல் நீதி பொறிமுறை ஒன்றினுள் அனுமதிக்க ஏதுவானது.

**கடந்த காலத்தை கையாளலும் (DWP) இலங்கையும்**

ஒக்டோபர் 2015 இன் ஐ.நா பிரேரணை 30/1 இல் இலங்கை அரசாங்கமானது “கடந்த காலத்தை கையாளல்” (DWP) கோட்பாட்டின் நான்கு தூண்களின் கீழும் பொறிமுறைகளை உருவாக்கும் என ஐ.நா மனித உரிமை பேரவைக்கு வாக்குறுதிகளை வழங்கி இருந்தது. அரசாங்கமானது குறிப்பாக கீழ்வரும் கட்டமைப்புக்களை உருவாக்கும் என உறுதி பூண்டது: (1) உண்மையைக் கண்டறியும், நல்லிணக்க, மீள் நிகழாமை ஆணைக்குழு (2) காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் (3) இழப்பீட்டிற்கான அலுவலகம் (4) விசேட சட்ட ஆலோசகருக்கான காரியாலயம் உள்ளடங்கிய பொறுப்புக்கூறலுக்கான நீதிப்பொறிமுறை.

இலங்கை அரசாங்கமானது தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற மேற்படி கட்டமைப்புக்களை உருவாக்குமா என்ற சந்தேகம் தற்போது நிலவி வந்தாலும், என்றோ இலங்கைக்குரிய “கடந்த காலத்தை கையாளல்” (DWP) கோட்பாட்டின் பொறிமுறைகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கடுகின்றது. எனவே இலங்கையின் சிவில் சமூக அமைப்புக்கள் மேலே கூறப்பட்ட “உத்தேச” நிலையில் காணப்படுகின்றன.

இலங்கையின் சிவில் சமூக அமைப்புக்களின் ஆவணப்படுத்தலானது எதிர்காலத்தில் உருவாக்கப்படவுள்ள “உத்தியோகபூர்வ” கட்டமைப்புக்களை பலப்படுத்துதல் மட்டுமல்லாது, மியன்மாரை தளமாகக் கொண்ட ND- Burma போன்று இக்கட்டமைப்புக்களை அரசோ/ சர்வதேச சமூகமோ உருவாக்குவதிலும் பங்களிப்பு செய்ய வாய்ப்புண்டு.

இலங்கையின் சூழலில் “கடந்த காலத்தை கையாளல்” கோட்பாட்டின் 4 தூண்களை ஆவணப்படுத்தலானது எவ்வாறு பலப்படுத்தும் என்பதற்கு சில உதாரணங்கள்:

1. **அறிந்து கொள்வதற்கான உரிமை**

- ஆவணங்கள், ஆதாரங்களை மற்றும் சாட்சியங்களினதும் பாதிக்கப்பட்டோரினதும் வாக்குமூலங்களை சேகரிப்பதன் மூலம், எதிர்காலத்தில் உருவாக்கப்படவிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன்னிலையில் பாதிக்கப்பட்டோர், தப்பித் பிழைத்தோர் மற்றும் சாட்சியங்களின் சாட்சிய மளித்தலுக்கு ஆதரவளித்தல்.
- இலங்கையின் கடந்த ஆணைக்குழு ஆவணங்களை பாதுகாத்து காணாமல் ஆக்கப்பட்டார் அலுவலக செயல்பாடுகளுக்கு துணை புரிதல்.

2. **நீதி பெற்று கொள்வதற்கான உரிமை**

- ஐ.நா மனித உரிமைகள் பேரவையினூடு உருவாக்கப்படும் குற்றவியல் பொறிமுறையினூடு அல்லது சர்வதேச குற்றவியல் பொறிமுறைகளினூடு நீதி பெற்றுக் கொள்ளும் நோக்கில் சாட்சியங்களை சேகரித்தலும் அவற்றைப் பேணுதலும்.
- இழைக்கப்பட்ட குற்றங்களை முன்னிலைப்படுத்தி, குற்றமிழைத்தவர்களை அடையாளம் காண முயற்சிப்பதினூடு பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை வலுப்படுத்தல்.

3. **இழப்பீட்டிற்கான உரிமை**

- அரச கட்டமைப்புக்களாலும், அரச சார்பற்ற இயக்கங்களாலும் இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள், தப்பித் பிழைத்தோர் எதிர்நோக்கும் பொருளாதார இடர்களை ஆவணப்படுத்தல்.
- இழப்பீடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென சமூகத்தின் நோக்குநிலையில் இருந்து ஆவணப்படுத்தல்.

4. **மீள் நிகழாமைக்கான உத்தரவாதம்**

- சமூகத்தின் நோக்குநிலையிலிருந்து முரண்பாடுகளின் அடிப்படை என்னவென்பதனை ஆராய்தல், ஆவணப்படுத்தல்.
- பல்வகையான, சிக்கலான வரலாற்று நினைவுகளை பேணுவதன் மூலம் நினைவுகூரும் பணிகளுக்கு ஆதரவளித்தல்.

இலங்கையின் சூழ்நிலையில் மனித உரிமை மீறல்களின் ஆவணப்படுத்தல் "கடந்த காலத்தை கையாளல்" கோட்பாட்டின் நான்கு தூண்களையும் எவ்வாறு பலப்படுத்தலாம் என்பதற்கு மேற்கூறிய காரணிகள் ஒரு சில உதாரணங்களே. இதில் சில நான்கு தூண்களில் ஒன்றிற்கு மேற்பட்ட கூறின் கீழ் அடக்கப்படலாம்.

இலங்கையின் சிவில் சமூக அமைப்புகள் ஆவணப்படுத்தல் திட்டங்களை முன்னெடுக்கும் போது "கடந்த காலத்தை கையாளல்" கோட்பாட்டை அறிந்திருப்பதோடு, ஆவணப்படுத்தல் அந்தப் பரந்த கோட்பாட்டினுள் முழுமையாக எவ்வாறு அடங்கும் என்ற அணுகுமுறையையும் கையாளுதல் அவசியம்.

## III எதனை ஆவணப்படுத்தல் என தீர்மானித்தல்

பொதுவாக மனித உரிமை ஆவணப்படுத்தல் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதையே குறிக்கும். எனினும், ஒரு சிவில் சமூக அமைப்பு ஆவணப்படுத்த முயலும் குறித்த ஒரு தகவலானது அந்த ஆவணப்படுத்தலின் குறிக்கோளுக்கு அமைய வேறுபடும்.

மேலே இக்கையேட்டில் குறிப்பிட்டபடி நிலைமாறுகால நீதி சூழலில் மனித உரிமை ஆவணப்படுத்தல் வெவ்வேறு நோக்கங்களை கொண்டிருக்கும் என்று கோடிட்டு காட்டியதற்கு இணங்க, இப்பகுதியில் அந்த ஆவணப்படுத்தலின் குறிக்கோள்களை தீர்மானிப்பது எவ்வாறு என கலந்துரையாடப்படும்.

### 1. சட்டரீதியான பொறுப்புக்கூறலுக்காக ஆதாரங்களை பேணல்

நிலைமாறுகால நீதி சூழ்நிலை ஒன்றில் பொறுப்புக்கூறலுக்கான குற்றவியல் பொறிமுறை ஒன்றுக்காக ஆதாரங்களை சேகரித்தலே சிவில் சமூக அமைப்புகளின் முக்கிய கவனமாக அமைந்திருக்கும். இதுவே குறிக்கோளாக அமையும் போது சிவில் சமூக அமைப்புக்கள் குறித்த மனித உரிமை மீறலானது அது சம்பந்தப்பட்ட பிரயோக சட்டத்தை எவ்வாறு மீறுகின்றது என்று நிரூபிக்க ஏதுவான கூறுகளை ஆவணப்படுத்தல் சாலச் சிறந்தது. எனினும், பிரயோக சட்டத்தை நாம் எவ்வாறு நிர்ணயிப்பது?

சிவில் சமூக அமைப்புக்கள் “உத்தேச” நிலையில் நின்று செயற்படுமிடத்து, பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறைகளோ, கட்டமைப்புக்களோ இன்னமும் நிறுவப்படாதவிடத்து, பிரயோக சட்டம் எதுவென்பது தெளிவற்றே காணப்படும். எனவே சர்வதேச மனித உரிமை, மனிதாபிமான மற்றும் குற்றவியல் சட்டங்களை ஆராய்வதன் மூலம் பொதுவாக மனித உரிமை மீறல்கள் எங்ஙனம் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன என்பதனை அறியலாம்.

**உதாரணம் - காணாமல் ஆக்கப்படல்**

எதிர்கால குற்றவியல் பொறிமுறை ஒன்றிற்காய் ஆதாரங்களை பேணும் நோக்கில் இலங்கையில் குறித்தவொரு சிவில் சமூக அமைப்பு பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஆவணப்படுத்தலை மேற்கொள்கின்றது எனக் கொள்வோம். இது தொடர்பிலான செயற்படு சட்டம் தெளிவற்று காணப்படுகின்றது. ஏனெனில் இலங்கையின் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்திற்கான சட்ட மூலத்தில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதற்கான வரைவிலக்கணம் வழங்கப்படவில்லை. மேலும் இலங்கை அரசாங்கமானது நீதிப் பொறிமுறை ஒன்றை நிறுவுவதற்கான சட்டமூலம் ஒன்றை இன்னமும் இயற்றவில்லை. இது இவ்வாறிருக்க, இலங்கை அரசாங்கமானது மே 2016 இல் பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து சகல நபர்களையும் பாதுக்காக்கும் சர்வதேச சாசனத்தில் கைச்சாத்திட்டது.

இந்த சாசனத்துக்கு அமைவாக இன்னமும் காணாமல் ஆக்கப்படலை தண்டனைக்குரிய குற்றவியல் குற்றமாக இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தாத போதும், சர்வதேச மனித உரிமை சட்டத்தின் கீழ் அதனை குற்றமாக பிரகடனப்படுத்த வேண்டி வரும். இதற்கமைவாக இந்த சாசனத்தில் காணாமல் ஆக்கப்படலின் கூறுகளாக கருதப்படுபவை குற்றவியல் பொறிமுறையொன்று உருவாக்கப்படுமுன் சட்டத்தில் இடம்பிடிக்கும் சாத்தியங்கள் உண்டு.

இந்த சாசனத்திற்கு அமைவாக காணாமல் ஆக்கப்படலின் பிரதான கூறுகள் பின்வருமாறு:

1. கைது/ தடுத்து வைப்பு அல்லது சுதந்திரத்தை பறித்தல்.

2. அரச முகவர்களால் அல்லது அரசின் அங்கீகாரம், ஆதரவு, உடன்பாட்டுடன்/ அரச சார்பற்ற அமைப்புக்களால் நிகழ்தல்.

3. காணாமல் ஆக்கப்பட்ட நபரின் சுதந்திரத்தை பறித்ததன் பின்னர் அந்நிகழ்வைப் பற்றி ஒப்புக்கொள்ள மறுத்தல், காணாமல் ஆக்கப்பட்ட நபரின் நிலை, இருப்பிடம் பற்றிய தகவல்களை மறைத்தல்.

4. மேற்கண்ட செயற்பாடுகளின் நோக்கம் சட்டத்தின் பாதுகாப்புக்கு வெளியே அந்நபரை பாதுகாத்தல்.

நிறுவப்படவிருக்கும் குற்றவியல் நீதி பொறிமுறைக்காக காணாமல் ஆக்கப்படல் தொடர்பாக ஆவணப்படுத்தலை ஒரு சிவில் சமூக அமைப்பு மேற்கொள்ளுமெனில் மேற்கூறிய நான்கு கூறுகளுக்கான ஆதாரங்களை எவ்வாறு சேகரிக்கலாம் என்று ஆராயலாம்.

குறிப்பாக, குறித்தவொரு நாடு அங்கீகரித்துள்ள அல்லது, குறைந்த பட்சம், கைச்சாத்திட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் உடன்பாடுகளில் மனித உரிமை மீறல்கள் எங்ஙனம் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன என்பதனை கண்டறிவது பயன் மிக்கதாக அமையும்.

இந்த உத்தி பூரணமான செயல்முறையாக இல்லாத போதும், எதனை ஆவணப்படுத்தல் என்பதற்கு குறுகியதொரு பார்வையையே வழங்கும் அபாயத்தை ஏற்படுத்தும் போதும் “உத்தேச” நிலைப்பாட்டிலிருந்து, குற்றவியல் பொறிமுறை ஒன்றிற்காய் ஆதாரங்கள் சேகரிக்க செயற்படும் சிவில் சமூக அமைப்புக்கள் கையாளும் பொதுவான ஒரு உத்தி இதுவாகும். குறிப்பாக, இதனடிப்படையில் சட்ட ரீதியாக “மனித உரிமை மீறல்” எனும் வரையறைக்குட்பட்ட சம்பவங்களையே சிவில் சமூக அமைப்புக்கள் ஆவணப்படுத்தப் போகின்றன. அந்த வரைவிலக்கணத்துக்கு அப்பாற்பட்ட எந்த சம்பவமும் அவணப்படுத்தப்படாது.

## 2. நினைவு கூரும் பணிகளுக்கு துணை புரிதல்

சிவில் சமூக அமைப்புகள் நினைவு கூரும் பணிகளுக்கு ஆதரவளிக்கவும், வலுவூட்டவும் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தும்போது தாம் எதனை ஆவணப்படுத்த வேண்டும் என்பதற்காக பரந்தவொரு அணுகுமுறையை கையாளலாம்.

பொதுவாக நினைவுகூரும் பணிகளுக்காக ஆவணப்படுத்துகையில் கீழ்கண்ட நோக்குநிலைகள், தகவல்கள் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்கள் ஆவணப்படுத்தலாம்:

- கடந்தகாலத்தின் மீள் கட்டுமானம் - குறித்த நிகழ்வுகள் எவ்வாறு, ஏன் நிகழ்ந்தன, மற்றும் அவை எவ்வாறு அனுபவிக்கப்பட்டன என அடையாளம் காணல்.
- யுத்தத்தின் தாக்கத்தை மதிப்பிடல் - சூழமைவையும் சந்தர்ப்பத்தையும் மீள் கட்டுமானம் செய்தல்.
- நிகழ்காலமும், எதிர்காலமும்.

ஆனாலும், நினைவுகூரலுக்காக சிவில் சமூக அமைப்பொன்று ஆவணப்படுத்தலில் ஈடுபடும்போது முதற்படியாக ஏலவே யுத்தத்தைப் பற்றி எங்கு, எவ்வகையான ஆவணப்படுத்தல்கள் காணப்படுகின்றன என மதிப்பிட வேண்டும். இதனடிப்படையில் அந்த ஆவணப்படுத்தல்களில் எங்கு பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன என்பதனையும் இனங்கண்டு, தமது ஆவணப்படுத்தல்கள் யுத்தத்தை பற்றி பல்வகைமையான பார்வையை உறுதி செய்வதாக அமைகின்றதா என தீர்மானிக்க வேண்டும். மேலும், தமது ஆவணப்படுத்தல் யுத்தததை பற்றி பெரும்பான்மை நோக்கு நிலையை வலுப்படுத்துவதாக அமையாதிருப்பதனை உறுதி செய்ய வேண்டும்.

**நினைவுகூரலுக்கான ஆவணப்படுத்தல்** - Memoria Abierta (ஆர்ஜன்டீனா)

இது ஆர்ஜன்டீனாவின் எட்டு மனித உரிமை அமைப்புக்களின் கூட்டு வலையமைப்பாகும். நூற்றுக்கணக்கான தடுப்பு முகாம்கள் மற்றும் வதைமுகாம்களை வரைபடங்களில் பதிதல், 700க்கும் மேற்பட்ட சொல்வழி வரலாறுகளை சேகரிப்பதை ஒழுங்கு செய்தல், இலகுவில் அடையக் கூடியவாறு கடந்த காலத்தின் ஆவணக் காப்பை மேற்கொள்ளல், கடந்த கால சர்வாதிகார ஆட்சிகளை பற்றி நாடு தழுவிய ரீதியில் விழிப்புணர்வு செயற்திட்டங்களை மேற்கொள்ளல் ஆகியன இவ்வலையமைப்பு கையாளும் பல்வேறு வகையான ஆவணப்படுத்தும் உத்திகளாகும்.

## IV ஆவணப்படுத்தும் தகவலின் வகைகளும் மூலங்களும்

நிலைமாறுகால நீதி சூழலில் மனித உரிமை மீறல்களின் ஆவணப்படுத்தலானது பல்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு விதமான தகவல்களை உள்ளடக்கியதாக பல வகையான மூலங்களிலிருந்து சேகரிக்கப்படலாம். கீழுள்ள அட்டவணை பூரணமாக இல்லாவிட்டாலும், இலங்கையின் சிவில் சமூக அமைப்புக்கள் மனித உரிமை மீறல்களின் ஆவணப்படுத்தலுக்காக சேகரிக்கக் கூடிய சில தகவல் வகைகளையும், மூலங்களையும் பட்டியல்படுத்துகின்றது.

| தகவலின் வகை | தகவல் மூலம் | இலங்கைக்கான உதாரணங்கள் |
|---|---|---|
| சொல்வழிமற்றும் வாக்கு மூலம் | -குற்றமிழைத்தவர்களின் எழுத்து மூல, ஒலி, ஒளிப்பதிவு வாக்குமூலங்கள்.<br><br>-மனித உரிமை மீறல்களிலிருந்து தப்பித் பிழைத்தோர், அவற்றால் பாதிக்கப்பட்டோரின் வாக்குமூலங்கள். | -காணாமல் ஆக்கப்பட்டோரின் புகைப்படங்கள், அவர்கள் தொடர்பில் குடும்பத்தாரின் வாக்குமூலங்கள்.<br><br>- யுத்தத்தின் இறுதிக்கட்டம் தொடர்பில் சனல் 4 ஆவணத்தில் இடம்பெற்ற பாதிக்கப்பட்டோரின் வாக்குமூலங்கள்.<br><br>-பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டோரின் வாக்குமூலங்கள் |
| நடவடிக்கைகளின் பதிவுகள் | -நீதிமன்றங்கள் மற்றும் உண்மைகளை கண்டறியும் ஆணைக் குழுக்களின் உத்தியோகபூர்வ கோப்புக்கள், பதிவுகள். | -பரணகம ஆணைக்குழு, உதலாகம ஆணைக்குழு போன்ற இலங்கையின் சகல கடந்தகால ஆணைக்குழுக்களினதும் நடவடிக்கைகளின் பதிவுகள் |

| | | |
|---|---|---|
| விசாரணைகளின் பதிவுகள் | -அரசாங்கத்தினால், அரச சார்பற்ற அமைப்புக்களால், அரசுக்கிடையிலான முகவர்களால், மனித உரிமை அமைப்புகளால் மேற்கொளளப்பட்ட விசாரணை மற்றும் கண் காணிப்பு கோப்புக்கள், அறிக்கைகள், நடவடிக்கை பதிவுகள் | -ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பிலான அறிக்கை.<br><br>-கடந்த பல வருடங்களாய் இலங்கையின் மனித உரிமை நிலவரத்தை கண்காணித்து வெளியிடப்பட்ட மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கைகள். |
| கண்டெடுக்கப்பட்ட ஆவணங்கள், தொல்பொருட்கள் | -எதிர்பாரா விதமாக கண்டெடுக்கப்படும் ஆவணங்களும் தரவு தொகுப்புக்களும்.. | -ஜூலியன் அசாஞ்சினால் வெளியிடப்பட்ட 'விக்கிலீக்ஸ்' தொகுப்பில் இலங்கையின் நிலவரம் குறித்த தொகுப்புகள். |
| சமூக வலைத்தளங்கள் | -Facebook, A+bA+g; (Youtube), டுவீட்டர் (Twitter), Instagram ஆகிய வலைத்தளங்கள், தனிப்பட்ட, அமைப்பு ரீதியான வலைத்தளங்கள். | - அரச மற்றும் இராணுவ வலைத்தளங்களின் இடைமாற்று பக்கங்கள் (cached pages).<br><br>- யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் Facebook மற்றும் டுவீட்டர் பதிவுகள். |
| ஏனைய நவீன தொழில் நுட்பங்கள் | -நவீன தொழிநுட்பத்தினூடு சேகரிக்க கூடிய தகவல்கள். | - யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் வன்னியில் மக்கள் குடிப்பரம்பலை செய்மதி படத்தொகுப்புகள் மூலம் இனங்காணல். |

[4] PILPG, 2016 supra பக்கம் 23.

**நீங்கள் ஆவணப்படுத்த வேண்டிய தகவலின் வகையும் அதை பெற்றுக் கொள்ளக் கூடிய மூலமும் என்ன?**

ஒரு சிவில் சமூகமைப்பு ஆவணப்படுத்தும் தகவலின் வகையும் அது பெற்றுக்கொள்ளும் மூலமும் அந்த அமைப்பின் ஆவணப்படுத்தும் நோக்கத்திலேயே பெரும்பாலும் தங்கியிருக்கும்.

உதாரணமாக, ஒரு அமைப்பு குற்றவியல் நீதிப் பொறிமுறை ஒன்றிற்காய் மனித உரிமை மீறல்களின் ஆவணப்படுத்தலை மேற்கொள்கின்றது என்றால் ஆவணப்படுத்தும் தகவலின் வகையும், மூலமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூடியவாறு ஆதாரத் தரத்தை பூர்த்தி செய்ய வேண்டும். இந்நிலையில் "கண்டெடுக்கப்பட்ட" ஆதாரங்கள் வரிசை காப்புப் பொறுப்பை (Chain of custody) பூர்த்தி செய்யாததால் அவற்றை புறந்தள்ள வேண்டியிருக்கும்.

இன்னொரு புறம், கடந்த காலத்தில் நிகழ்ந்த பாரிய மனித உரிமை மீறல்களைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்ட ஒரு அமைப்பு ஆவணப்படுத்தலை மேற்கொள்ளுமென்றால் சாதாரண குடிமக்களையும் சென்றடையக் கூடியவாறு தகவல் வகைகளை அவ்வமைப்பு சேகரிக்கலாம்.

எவ்வாறெனினும், எந்நோக்கத்திற்காக ஒரு அமைப்பு ஆவணப்படுத்தலை மேற்கொண்டாலும் அவ்வாவணப்படுத்தலின் தரத்தையும், நம்பகத்தன்மையையும் அவ்வமைப்பு உறுதி செய்ய வேண்டும். இதை பற்றி விரிவாக பின்வரும் அத்தியாயங்களில் காணலாம்.

---

[5] PILPG, 2016 supra பக்கம் 23

## V தகவல் சேகரிப்பின் அடிப்படை கோட்பாடுகள்

தான் எவ்வகையான தகவலை எம்மூலங்களிலிருந்து சேகரிக்கப்போகின்றது என்று ஒரு அமைப்பு முடிவு செய்த பின்னர், அடுத்த நிலை தகவல் சேகரிப்பதாகும்.

எவ்வகையான தகவல் சேகரிப்பாயிருப்பினும் மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலில் ஈடுபடும் ஒரு சிவில் சமூக அமைப்பு ஒழுக்கவியல் சார்ந்த மனித உரிமை மீறல் தகவல் சேகரிப்பிற்காய் பின்வரும் அடிப்படை கோட்பாடுகளை பின்தொடரல் இன்றியமையாதது:

### 1. தீங்கு விளைவிக்காமை

மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தும் அமைப்பொன்று பின்பற்ற வேண்டிய மிகவும் முக்கிய ஒழுக்கவியல் கோட்பாடு தீங்கு விளைவிக்காமை ஆகும். தீங்கு விளைவிக்காமை என்பது "எதிர்பாராத விதமாக உடல் ரீதியான அச்சுறுத்தல்களையும், சமூக-உளவியல் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு நடவடிக்கையினதும் எதிர்மறையான விளைவுகளை தடுத்தல் அல்லது இயன்றளவு குறைத்தல்" ஆகும்.[4]

### 2. விபரமறிந்து இசைவு வழங்குதல்

மனித உரிமை மீறல்கள் பற்றி சிவில் சமூக அமைப்புகளுக்கோ, செயற்பாட்டாளர்களுக்கோ தகவல் வழங்குனர்கள் கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் தமக்கு விபரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனை தாம் புரிந்து கொண்டுள்ளதாகவும், அதன் பின்னரே சுய விருப்புடனும், சுதந்திரமாகவும் தாம் ஆவணப்படுத்தலில் ஈடுபடுகின்றனர் என்று உறுதி செய்யும் செயன்முறையே விபரமறிந்து இசைவு வழங்குதல் ஆகும். இவ்விசைவு எழுத்துருவில் இருப்பது சாலச் சிறந்தது:

- ஆவணப்படுத்தலின் நோக்கமும், உள்ளடக்கமும்.

- இரகசியத்தன்மையின் அர்த்தமும், அது குறித்த ஆவணப்படுத்தலுக்காக தாம் வழங்கும் தகவலுக்கு பொருந்துமா என அறிதலும்.

- தாம் வழங்கும் தகவல் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும் விதம்.

- ஆவணப்படுத்தலில் பங்குபற்றுவதால் எதிர்நோக்கக்கூடிய அச்சுறுத்தல்களும், கிடைக்கக் கூடிய அனுகூலங்களும்.

- தாம் வழங்கும் தகவலை ஆவணப்படுத்தும் சிவில் சமூக அமைப்பின் நபர்/நபர்களினதும் அடையாளங்கள், மற்றும் எதிர்காலத்தில் அவ்வமைப்பை, அந்நபர்/நபர்களை தொடர்பு கொள்ளும் முறைகள்5

விபரமறிந்து இசைவு வழங்குதல் என்பது தகவல் சேகரிப்பின் ஒவ்வொரு படி நிலையிலும் தொடர்ந்து நடைபெற வேண்டிய ஒரு படிமுறையாகும். தகவல் வழங்குனருக்கு தாம் தகவல் வழங்குவதிலிருந்து எந்த நிலையிலும் விலகலாம் எனவும், எவ்வித பின்விளைவும் இன்றி தகவல் வழங்குதல் பற்றியோ, அத்தகவலை பயன்படுத்துவது பற்றியோ தம் மனதை மாற்றிக் கொள்ளலாம் எனவும் தெளிவாக அறிவுறுத்தப்பட வேண்டும்.

## 3. இரகசியத்தன்மை அல்லது நம்பகத்தன்மை பேணுதல்

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தாம் சேகரிக்கும் தகவல்களையும், பாதிக்கப்பட்டோரினதும், சாட்சிகளினதும் அடையாளங்களை மிகவும் கவனமாகப் பாதுகாத்தல் இரகசியத தன்மையை பேணுதல் ஆகும். ஒரு அமைப்பு தாம் சேகரிக்கும் தகவலுக்கமைய பேணும் இரகசியத்தன்மையும் வேறுபடலாம்.

எந்தவொரு சூழ்நிலையிலும் சேகரிக்கும் தகவலின் இரகசியத்தன்மையின் மட்டம் எவ்வாறு இருப்பினும் இது பங்குபற்றும் தகவல் வழங்குனருக்கு தெளிவாக விளக்கப்பட வேண்டும்.

தகவல் வழங்குனரின் அடையாளம் வெளிப்படும் இடத்தில் அவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற நிலையில் அவர்களின் அடையாளங்களை இரகசியமாகப் பேணுதல் சாலச் சிறந்தது. மேலும் தகவல் சேகரிக்கும் அமைப்பின் இரகசியத்தன்மையை பேணுவதில் இருக்கும் வரையறைகளும் பங்குபற்றுவோருக்கு தெளிவாக விளக்கப்பட வேண்டும்.

## 4. நிபுணர்களிடம் பரிந்துரை செய்தல்

ஆவணப்படுத்தல் செயன்முறையின் பின்னிலையில் தகவல் வழங்குநர்களான பாதிக்கப்பட்டோருக்கும், சாட்சியங்களுக்கும் தேவைப்படும் மருத்துவ, உள, சட்ட, பொருளாதார ரீதியான உதவிகளையும், சேவைகளையும் பெற்றுக் கொள்ள வழிப்படுத்தும் பொறிமுறைகளை ஆவணப்படுத்தும் அமைப்புக்கள் தீர்மானிக்க வேண்டும். கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ள பாதிக்கப்பட்டோரிடம் தகவல் சேகரிக்கும் முன்பதாக அவர்களுக்கு பொருத்தமான தனிப்பட்ட மற்றும் சமூக ரீதியான ஆதரவு கட்டமைப்புக்கள் உள்ளனவா என தீர்மானித்த பின்னரே ஆவணப்படுத்தலை முன்னெடுக்க வேண்டும். மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலை எவ்வளவு நன்னெறியுடனும் நல்லெண்ணத்துடனும் முன்னெடுத்தாலும் பாதிக்கப்பட்டோர் மன உளைச்சலை மீள் அதிர்ச்சிக்குட்படலின் அச்சுறுத்தல் இருந்து கொண்டே இருக்கும். அந்தச் செயன்முறையின் போது அந்த நபர்களுக்கு ஆதரவளித்தல் தமது கடைமையென சிவில் சமூக அமைப்புக்கள் எண்ணி செயற்பட வேண்டும்.

[6] PILPG, 2016 supra பக்கம் 25

## 5. மீள் அதிர்ச்சிக்குட்படலை அடையாளம் காணலும், அதனை இயன்றளவு நிவர்த்தி செய்தலும்

மனித உரிமை மீறல்களின் ஆவணப்படுத்தலின் போது பாதிக்கப் பட்டோரினதும், சாட்சியங்களினதும் மீள் அதிர்ச்சிக்குட்படலின் அச்சுறுத்தலை அடையாளம் காணவும் அதனை நிவர்த்தி செய்யவும் சிவில் சமூக அமைப்புகள் பின்வருவனவற்றை கையாள வேண்டுமென பொதுச் சர்வதேச சட்டம் மற்றும் கொள்கை திட்டக் குழுமம் (PILPG) அறிவுறுத்துகின்றது்

- அதிர்ச்சிக்குரிய அறிகுறிகள் தொடர்பில் பரீட்சயப்பட்டிருத்தல்.
- தகவல் வழங்கும் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியமளிப்பவர் வேண்டுமென்றே மழுப்பும் விதத்தில் விடையளிக்கின்றார் என்றோ, உண்மையை வேண்டுமென்றே திரிபு படுத்துகின்றார் என்றோ முன்கூட்டியே கருதிக் கொள்ளாமை.
- குற்றத்தின் காலவரிசைக்குப் பதிலாக தகவல் வழங்குனரின் விவரணையிலும், குற்றத்தின் கூறுகளிலும் கவனம் செலுத்துதல் (உ+ம்: “அடுத்து என்ன நடந்தது?” என்பதற்கு பதிலாக “வேறு என்ன நடந்தது?” என்று கேட்கலாம். குற்றத்தின் காலவரிசையில் பிந்திய தகவல் சேகரிப்புகளின் போது கவனம் செலுத்தலாம்).
- உரையாடல் அணுகுமுறையொன்றை கையாளல்.
- சுயவிடை வினாக்களாய் கேட்டல்.
- தகவல் சேகரிக்கும் செவ்வியின் போது தகவல் வழங்கும் பாதிக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சியாளருக்கு அதிகாரம் வழங்குதல் (உ+ம் இடைவேளையை தீர்மானித்தல், இருக்கை ஒழுங்குகள்).
- தகவல் வழங்குநருடன் நம்பிக்கையான உறவு முறையொன்றை வளர்த்துக்கொள்ள நேரம் எடுக்கும்

என்பதனைப் புரிந்து கொள்ளல் - பாதிக்கப்பட்டோருக்கும், சாட்சியங்களுக்கும் அந்நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள தேவையானளவு நேரத்தை வழங்குதல். ஆரம்பத்தில் அவர்கள் பதிலளிக்க சங்கடப்படும் கேள்விகளை தொடர்ந்தும் கேட்பதைத் தவிர்த்தல்.

- மீள் அதிர்ச்சிக்குள்ளாகும் ஆபத்து கணிசமானளவு காணப்படுமிடத்து நிபுணர்களின் உதவியை நாடி அவர்கள் மூலம் தகவல் சேகரித்தல்.
- பாதிக்கப்பட்டவரினதும், சாட்சியத்தினதும் அதிர்ச்சியையும், உளைச்சலையும் உணர்ந்து ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வையும் அக்கறையையும் வெளிப்படுத்தல்.
- தகவல் வழங்குநர்கள் காண்பிக்கும் பலமான எதிர்வினைகளை தகவல் பெறுநர் தனிப்பட்ட விதத்தில் எடுக்காமை. தகவல் பெறுநர் தங்கள் சொந்த உணர்ச்சிகளை நிர்வகித்தல்[6]

மிகவும் முக்கியமாக, பாதிக்கப்பட்டோரையும், சாட்சியங்களையும் செவ்வி எடுக்கும்போது, செயற்பாட்டாளர்களும், சிவில் சமூக அமைப்புக்களும், மனித தன்மானத்துக்கு மதிப்பளிக்கும் விதத்தில் செயற்பட வேண்டும். தேவையானவிடத்து தகவல் வழங்குனருக்கு நிபுணர்களின் ஆதரவுக் கட்டமைப்புக்களை ஏதுவாக்கிக் கொடுத்தல்.

## 6. எதிர்பார்ப்புக்களை நிர்வகித்தல்

இலங்கைச் சூழலில் பலன் தராத பல்வேறு ஆணைக்குழுக்களும், விசாரணைகளும் இடம்பெற்றுள்ளன. எண்ணற்ற அரசாங்க வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில், மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தல் மீது அதன் பலமின்மையினால் பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பாக வடக்கு- கிழக்கை சேர்ந்தவர்கள், நம்பிக்கையின்மை தெரிவித்து வருகின்றனர். இந்நம்பிக்கையின்மை மேலும் வலுப்படுத்தப்படாத வகையில் பாதிக்கப்பட்டவர்களின்

எதிர்பார்ப்புக்களை நிர்வகித்தல் சிவில் சமூக அமைப்புக்களின் முக்கிய பொறுப்பாகும். குறித்தவொரு ஆவணப்படுத்துதலின் விளைவுகள், முடிவுகள் தொடர்பாக தங்களால் காக்க முடியாத, கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வாக்குறுதிகளையோ, உத்தரவாதங்களையோ வழங்கக் கூடாது.

## 7. நடுநிலைத்தன்மையை நிரூபித்தல்/ உறுதிப்படுத்துதல்

மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தல்கள் மேற்கொள்ளும்போது தமது கடமை உண்மைகளை சேகரித்தல் மற்றும் அவற்றை பேணுதலேயன்றி, தீர்ப்பு வழங்குதலல்ல என்பதனை சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், அமைப்புக்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். பாரபட்சங்களை களையவும், அரசியல் நிகழ்ச்சி நிரலொன்றுக்கு ஏற்ப செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாற்று முன்வைக்கப்படாமல் இருக்கவும் சிவில் சமூக அமைப்புக்கள் தமது ஆவணப்படுத்தலில் ஒழுங்குமுறை சார்ந்தும், துறைசார்ந்தும் காணப்பட வேண்டும்.

## 8. சேகரிக்கப்படும் தகவலின் வரிசை காப்பு பொறுப்பை பேணுதல்

மனித உரிமை மீறல்களின் ஆவணப்படுத்தலின் நம்பகத் தன்மையையும், உண்மைத் தன்மையையும் உறுதி செய்வதற்கு தகவல் பெறும் படிநிலையிலிருந்து, தகவல் சேகரிக்கும் அமைப்பினால் அத்தகவல் இறுதியாக வெளியிடப்படும் படிநிலை வரை அத்தகவலை கையாளும் அனைவரையும் விபரிப்பதே தகவலின் வரிசை காப்பு பொறுப்பை பேணுதல் ஆகும்.

ஒரு பூரணமான, உடையாத வரிசைக் காப்பானது பின்வருவனற்றை உள்ளடக்கியிருக்கும்:

- தகவல் சேகரிக்கப்பட்ட/உருவாக்கப்பட்ட படிநிலையிலிருந்து தகவல் பெறுநரின் அமைப்பை அடையும் படிநிலை வரை அதன் அமைவிடம்.
- ஒவ்வொரு படிநிலையிலும் அத்தகவலை கையாண்ட நபர்களின் அடையாளங்கள்.
- அந்தந்த நபர்கள் எக்காரணத்துக்காக அக்குறித்த தகவலை கையாண்டனர் என்ற விபரம்.

ஒரு தகவலின் ஆவணப்படுத்தலுக்கான வரிசைக்கு காப்பு எவ்வளவுக்கு எவ்வளவு குறுகியதோ அத்தகவலின் உண்மைத்தன்மை அவ்வளவுக்கு அவ்வளவு உயர்வானதாக கருதப்படும்.

## IV தகவலின் தரத்தையும் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்தல்

மனித உரிமை மீறல் ஆவணப்படுத்துதலுக்காக சேகரிக்கப்படும் ஆவணங்கள் பின்வரும் பண்புகளை கொண்டிருக்க வேண்டும்:

- உண்மைத்தன்மை.
- நம்பகத்தன்மை.
- பயன்படுதன்மை அல்லது நிரூபித்தற் பெறுமதி கொண்டிருத்தல்.

மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலில் ஈடுபடும் சிவில் சமூக அமைப்புக்கள் தகவல் சேகரிப்பின் போது பின்வரும் வினாக்களுக்கு விடை காண்பதன்'மூலம் ஆவணங்கள் உண்மைத்தன்மையுடையவை எனவும், நம்பகத்தன்மையுடையவை எனவுமஇ எனவே அவை நிரூபித்தற் பெறுமதி கொண்டவை என்றும் ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

- தாம் சேகரித்த/ உருவாக்கிய ஆவணம் என்ன?
- எங்கே/ எப்போது அவ்வாவணம் உருவாக்கப்பட்டது?
- அவ்வாவணம் யாரால் உருவாக்கப்பட்டது?
- ஆவணத்திற்கான தகவல் சேகரித்தது யார்?
- தனது அமைப்பின்றி வேறு ஒரு நபரால்/அமைப்பால் தகவல் சேகரிக்கப்பட்டது எனின், அந்நபரின்/அவ்வமைப்பின் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தபட்டதா? அவ்வாவணத்தில் அடங்கிய தகவல்களை உறுதிப்படுத்த முடியுமா?
- இன்னுமொரு அமைப்பினால் தகவல் சேகரிக்கப்பட்டிருப்பின்/ ஆவணம் தயாரிக்கப்பட்டிருப்பின் அவ்வமைப்பின் வழமையான வேலைத்திட்டத்தின் ஒரு பங்காகவா அச்செயன்முறை மேற்கொள்ளப்பட்டது? நிபுணர் ஒருவரால் அவ்வாவணம்

தயாரிக்கப்பட்டதா? அவ்வமைப்பினுள் பலமான உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறைகள் காணப்படுகின்றனவா?

- அவ்வாவணம் பௌதீக ஆதாரமாகவோ, அச்சு நகலாகவோ காணப்படுமிடத்து அது உங்களை வந்தடையும் வரை கடந்து வந்த வரிசைக்கு காப்புப் பொறுப்பு முறை என்ன? (குறித்த திகதி, இட அமைவு, கையாண்ட நபர்களின் விபரம்).
- மூல தகவல் வழங்குநர் அவ்வாவணத்திற்கு தகவல் வழங்குவதற்கு தூண்டியது எது? அத்தகவல் சுயமாக வழங்கப்பட்டதா?

சேகரிக்கப்பட்ட ஆவணம் இலத்திரனியல் வடிவில் அமைந்திருப்பின் அவ்வாவணத்தின் மூலம் மற்றும் ஆக்கியோன் தொடர்பில் பதிவுகளை பேணும் "நுண்தகவல்" களை உறுதி செய்ய ஆவணப்படுத்தும் சிவில் சமூக அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித உரிமைத் துறையில் பொதுவாக அமுலில் உள்ள "டப்ளின் நுண்தகவல் தரப்படுத்தல்கள் கருவம்" (Dublin Core Metadata Standards) இற்கு அமைவாக ஒரு இலத்திரனியல் தகவலின் உண்மைத்தன்மையை உறுதி செய்ய கீழ்வரும் நுண்தகவல்கள் பதியப்படல் வேண்டும்:

- ஆக்கியோன், பங்களிப்பாளர்(கள்) மற்றும் பிரசுரித்தவர்
- வளத்தின் பெயர்
- அவ்விலத்திரனியல் தகவலின் வாழ்க்கைவட்டத்தின் நிகழ்வுகளின் திகதிகள் (உருவாக்கம், கிடைக்கப் பெறுதல், திருத்தப்பட்டது, சமர்ப்பிக்கப்பட்டது அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டது)
- மொழி
- தகவலின் வகையும், வடிவமும்
- பரிமாணம்

- சாதனம்
- தலைப்பு, விபரம், இனங்காட்டி
- துழாவுகை
- உரிமங்கள்
- அவையோர்
- தோற்றுவாய்

சிவில் சமூக அமைப்பொன்று தான் உருவாக்கும் இலத்திரனியல் தகவலினுள் மறைக்குறியீடு மூலம் நுண்தகவல்களை அந்நுண் தகவல் சிதையாத வண்ணம் உட்பொதிக்க ஏதுவாகும் மென்பொருட்கள் தற்போது காணப்படுகின்றன. மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலுக்கு பொருத்தமாக *CameraV, IBA eyewitness to Atrocities, and KoBo Toolbox* என்பன உருவாக்கப்பட்டுள்ளன.

## VII பாதுகாப்பு

இலங்கையில் மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலின் மிக முக்கிய அம்சம் ஆவணத்தின் பாதுகாப்பையும், தகவல் வழங்குநர்களினதும், தகவல் பெறுநர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதாகும். பாதுகாப்பை நிர்வகித்தலின் முதல் படிநிலை அச்சுறுத்தல் மதிப்பீட்டை மேற்கொள்ளல், அதனைத் தொடர்ந்து பாதுகாப்பையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தலுமாகும். சில சந்தர்ப்பங்களில் ஆவணப்படுத்துவதற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் மிகவும் அதிகளவு காணப்படுவதாக பாதுகாப்பு மதிப்பீட்டின்படி தெரிய வரக்கூடும். இந்நிலையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், அமைப்புகளும் அச்சுறுத்தலை உணர்ந்து, அவ்வாவணப்படுத்தலை தொடர் அவ்வச்சுறுத்தல்களை புறந்தள்ளாதிருத்தல் சாலச் சிறந்தது.

### I. அச்சுறுத்தல்களை மதிப்பிடுதல்

தகவல் வழங்குனருக்கான அச்சுறுத்தலை மதிப்பிடுதல் (பாதிக்கப்பட்டோர், தப்பித் பிழைத்தோர், சாட்சிகள்)

மனித உரிமை மீறல்களின் ஆவணப்படுத்தலை முன்னெடுக்க முன்னர் எந்தவொரு செயற்பாட்டாளரோ, அமைப்போ தகவல் வழங்குனரின் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்ய வேண்டும். தகவல் வழங்குனருக்கு கீழ்வரும் அச்சுறுத்தல்கள் ஏற்படுமா என்று மதிப்பிடுதல் அவசியம்:

- பாதிக்கப்பட்டோர், சாட்சியங்களுக்கு எதிராக குற்ற மிழைத்தவர் என சந்தேகிக்கப்படும் நபர்கள், அவர்களது உறவினர்கள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள் பழிவாங்குதல், பயமுறுத்தல் அல்லது அச்சுறுத்தல்.
- பாதிக்கப்பட்டோரின் சொந்த உறவினர்கள் அவர்கள்களுக்கு உடல்ரீதியாக ஊறு விளைவித்தல்.
- குற்றமிழைத்தவருடன் இணங்கிப்போகுமாறு பாதிக்கப் பட்டோரும், சாட்சியங்களும் நிர்ப்பந்திக்கப்படல்.

- மீள் அதிர்ச்சிக்குள்ளாதல்.
- பாதிக்கப்பட்டோர் நீதி கிடைத்தலை முன்னிலைப்படுத்துவதை தடுக்கும் முகமாக அவர்களின் குடும்பங்களுக்கு பொருளாதார நிதி பெற்றுக் கொடுக்க எத்தனித்தல்.
- குடும்பங்களாலும், சமூகத்தினாலும் புறந்தள்ளப்பட்டு, தனிமைப்படுத்தப்படல். பாலியல் மற்றும் பாலின வன்முறைக்குட்பட்டவர்களின் குழந்தைகளும், பிள்ளைகளும் பல சந்தர்ப்பங்களில் கைவிடப்படல்.
- வாழ்வாதார இழப்பு.
- பாடசாலைகளுக்கும் தொழில்நுட்ப பயிற்சிக்குமான வாய்ப்புக்கள் இழக்கப்படல்.
- குற்றங்களாக அறிவிக்கப்பட்ட செயல்களுக்காக கைது செய்யப்படல், தண்டிக்கப்படல்.

ஆவணப்படுத்தலை மேற்கொள்ளும்இ தகவல் பெறும் செயற்பாட்டாளர்களும், அமைப்புக்களுக்கும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை மதிப்பிடல்

கீழ்வரும் வினாக்களுக்கு விடை காண்பதன் மூலம் தகவல் பெறுனருக்கான அச்சுறுத்தலை மதிப்பிடலாம்:

- தகவல் பெறுனர் செயற்படவிருக்கும் அமைவிடமும், அந்நபரை அடைவதும் பாதுகாப்பானதா?
- குறித்த அமைவிடத்தினுள் சென்று வருதல் பாதுகாப்பானதா?
- போர் அனர்த்தம் அல்லது இயற்கை அனர்த்தங்கள் மூலம் அச்சுறுத்துக்கள் உண்டா?
- குறித்த இடத்தில் அரச முகவர்களினதோ, அரச சார்பற்ற ஆயுதக்க குழுக்களின் பிரசன்னம் உள்ளதா? இவை தகவல் பெறுனருக்கு அச்சுறுத்தலாக அமையுமா?

- மற்றையவரின் அதிர்ச்சிகள், உளைச்சல்களை கையாளும்போது தகவல் பெறுனரும் அவ்வதிர்ச்சிகளை அனுபவிப்பாரா?

- மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தல் தகவல்கள் மற்றும் ஆதாரங்களை தன்னகப்படுத்தி வைப்பதினால் செயற்பாட்டாளருக்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புண்டா?

- மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலுக்கு எதிராக தொடர்ந்து காணப்படும் இராணுவ இடையூறினால் செயற்பாட்டாளரின் சொந்த சமூகம் அவரை தனிமைப்படுத்தக் கூடுமா?

மேலும், கீழ்வரும் வினாக்களுக்கு விடை காண்பதன் மூலம் செயற்பாட்டாளர்களை மறைமுகமாக பாதிக்கக் கூடிய அச்சுறுத்தல்கள் ஏற்படுமா என மதிப்பிடலாம்:

- குறித்த தகவல் சேகரிப்பானது உள்ளூரில் துணை அமைப்புக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமா? அவற்றின் பதிவு இரத்து செய்யப்படக் கூடுமா?

- இக்குறித்த தகவல் சேகரிப்பானது அந்த அமைப்பின் ஏனைய நடவடிக்கைகளை பாதிக்குமா?

**சேகரிக்கப்படும்/ உருவாக்கப்படும் ஆவணங்களுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலை மதிப்பிடுதல்**

மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலின் பங்குதாரர்களான தகவல் வழங்குனர்கள் மற்றும் தகவல் பெறுனர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமெனில், சேகரிக்கப்படும் தகவலின் பாதுகாப்பை உறுதி செய்தல் இன்றியமையாதது. இதனை பின்வரும் கேள்விகளுக்கு விடை காண்பதன் மூலம் மதிப்பிடலாம்:

- ஆவணங்கள் பறிமுதல் செய்யப்படாமல் போக்குவரத்து செய்ய முடியுமா?

- தேவையற்ற கண்டறிதலின்றி பாதுகாப்பாக தகவலை சேகரிக்க முடியுமா?
- நீண்ட நேரத்திற்கு இலத்திரனியல் வடிவிலோ, அச்சு வடிவிலோ பாதுகாப்பாக தகவலை சேகரிக்க முடியுமா?
- இயற்கை கூறுகளினதும், ஏனைய அச்சுறுத்தலிலிருந்தும் பாதுகாப்பாக ஆவணங்களைப் பேண முடியுமா?

## II. தகவல்களையும் தகவல் மூலங்களையும் பாதுகாப்பதற்கான உத்திகள்

ஒரு சிவில் சமூக அமைப்பானது பாதுகாப்பு மதிப்பீடுகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து ஆவணப்படுத்தலை மேற்கொள்ள முடிவெடுக்கும் பட்சத்தில் தாம் சேகரிக்கும்∴உருவாக்கும் ஆவணங்களை பாதுக்காக்கும் பொறிமுறைகளை உருவாக்க வேண்டும்.

**பௌதீகப் பதிவுகளை பாதுகாத்தல்**

ஒரு சிவில் சமூக அமைப்பு பௌதீக ஆவணமொன்றை பெற்றுக்கொள்ளும் தருணத்தில் கீழ்வரும் பாதுகாப்பு உத்திகளை கையாண்டு அவ்வாவணங்களை பாதுகாக்கலாம்:

- பதிவுகள் அல்லது ஆவணங்களை உருவாக்கிய∴ பெற்றுக்கொண்ட உடன் அவற்றினை புகைப்படமெடுத்தல்.
- இயன்றளவு அவ்வாவணங்களின் பிரதிகளை எடுத்தல்.
- இயற்கை கூறுகளிடமிருந்து பாதுகாப்பாக ஆவணங்களை பேணுதல்.
- இரகசியம் பேண வேண்டிய ஆவணங்களை ஏனைய ஆவணங்களிலிருந்து வேறுபடுத்தி பாதுகாத்து வைத்தல்.

- இரகசியத்தன்மை பேண வேண்டிய ஆவணங்களுக்கு,
    - பாதிக்கப்பட்டோரினதும், சாட்சியங்களினதும் அடையாளங்களை குறியீடாக்கி அவற்றின் வழிகாட்டும் குறியீட்டை புறம்பாக பேணுதல்.
    - இரகசியத்தன்மை பேண வேண்டிய ஆவணங்களை மிகக் குறைந்தளவான நபர்களையே அணுக இடமளித்தல்.
    - அச்சு நகலாக காணப்படும் இரகசியமான தகவல்களை அடைக்கப்பட்ட ஆவண அலுமாரியினுள், ஏனைய ஆவணங்களிலிருந்து புறம்பாகப் பேணுதல்.
    - இரகசிய தகவல்கள் அடங்கிய கோப்புகள் மீதோ, அலுமாரிகள் மீதோ வெளிப்படையான அடையாளச்சீட்டுக்களை இடுவதை தவிர்த்தல்.
    - அத்தியாவசிய தேவை ஏற்படுமிடத்து மாத்திரமே இரகசிய ஆவணங்களை சுமந்து செல்லல்.

**இலத்திரனியல் பதிவுகளை பாதுகாத்தல்**

இன்று பொதுவாக மனித உரிமை மீறல்களின் ஆவணப் படுத்தலானது இலத்திரனியல் வடிவங்களிலேயே சேகரிக்கப்பட்டு, உருவாக்காப்படுகின்றது. இது தனித்துவமான பாதுகாப்பு அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதோடு செயற்பாட்டாளர்கள் பின்வரும் உத்திகள் மூலம் இவ்வச்சுறுத்தல்களிலிருந்து இவ்வாவணங்களை பாதுகாக்கலாம்:

- இயன்றளவு கணனி வன்தட்டுக்களில் (hard drive) தகவல் சேகரிப்பதை தவிர்த்து, மறைகுறியீடாக்கம் செய்த (encrypted), கடவுச்சொல் மூலம் பாதுகாக்கப்பட்ட (password protected), புறக் களஞ்சியங்களிலும் (external storage devices), நிரல் திரட்டிகளிலும் (pen drive) தகவல்களை சேமித்தல்.

- நீக்கிவிடக்கூடிய வன்தட்டுகளை பிரயோகிக்கவும். கையடக்க கருவிகள் (portable devices) எளிதில் மறைக்கப்படக்கூடியவை. மேலும், அவசர சூழலில் இவை எளிதில் அச்சூழலிலிருந்து அப்புறப்படுத்தப்படக்கூடியவை. இச்சாதனங்கள் எப்பொழுதும் கடவுச் சொல் (password) மூலம் பாது காக்கப்பட வேண்டியவை. இவற்றை ஒரு பொழுதும் பாதுகாப்பற்று அலுவலகத்தில் விட்டு வைக்கக் கூடாது. கணனி திருடப்படுமிடத்து அல்லது பறிமுதல் செய்யப்படுமிடத்து கணனியின் வன்தட்டில் (internal hard disk) இரகசிய தகவலை சேகரித்திருக்காவிட்டால் அதன் பின்விளைவுகள் பாரதூரம் குறைந்ததாகவே அமையும்.
- கணனியின் வன்தட்டின் மறைகுறியீடுதாக்கத்தை (disk encryption) செயல்படுத்தல்.

- கணணிகளுக்கும், இலத்திரனியல் சாதனங்களுக்கும், வைரஸ் எதிர்ப்பு (anti-virus), ஒற்று மென்பொருள் எதிர்ப்பு (anti-spyware) மற்றும் கணனி அரண் (firewall) மென்பொருட்களை நிறுவுவதுடன், ஏனையோர் அவற்றை அணுகாத வண்ணம் துவக்க கடவுச்சொல் (boot-up password) ஒன்றினையும் உருவாக்குதல்.
- சகல இரகசிய இலத்திரனியல் கோப்புகளையும் மறைக் குறியீடாக்கம் செய்து (encryption), கடவுச்சொல் (password) இட்டு பாதுகாத்தல். இவை ஒரு சீரான முறையில் பாதுகாப்பான ஒரு ஆவணக்காப்பகத்திற்கு இடம் மாற்றப்படுவதை உறுதி செய்தல் (இது அவ்வமைப்பின் தலைமை காரியாலயமாகவோ, வேறு பாதுகாப்பான அமைவிடமாகவோ இருக்கலாம்).
- இவ்வாவணங்கள் வெளிநாட்டில் பாதுகாக்கப்பட வழிகளை வகுத்தல்

- சகல இலத்திரனியல் ஆவணங்களும் சீரான முறையில் பாதுகாப்பு பிரதி (backup) எடுக்கப்படுவதை உறுதி செய்தல். இப்பிரதிகள் பாதுகாப்பாக வேறு இடத்தில் சேமிக்கப்பட்ட வேண்டும்.
- தேவையேற்படுமிடத்து இவற்றின் அச்சு நகல்களை பெற்றுக் கொள்ளல். அச்சு நகல்கள் இலத்திரனியல் ஆவணங்களுக்கு பாதுகாப்பு பிரதியாக (backup) செயற்படலாம்.

**இலத்திரனியல் தகவல் பாதுகாப்பிற்கான கருவிகள்**

(இவற்றிற்கான இணைப்புக்களை பிற்சேர்க்கையில் பார்க்கவும்)

இணையத்தில் இலவசமாக பெறக்கூடிய மறைக்குறியீடாக்கும் (encryption) கருவிகள்/ மென்பொருட்கள்:

-*GNU Privacy Guard* (Windows, Mac மற்றும் Linux இயங்குதளங்களுக்குரியது)

-*AxCrypt* (Windows ற்கு மாத்திரம்)

-*TrueCrypt* (பல சிவில் சமூக அமைப்புக்களால் பயன்படுத்தப் படுகின்றது)

இலவச மென்பொருட்கள் மூலம் பாதுகாப்பான இலத்திரனியல் தகவல் சேமிப்பு பற்றிய இணையத்தள வழிகாட்டி *Security in-a-box.*

சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், அமைப்புக்களும் தமது மின்னஞ்சல்களினதும் ஏனைய தொலைத்தொடர்பு செய்திகளினதும் பாதுகாப்பையும் மேம்படுத்த கருவிகள்: *Tor, PKE* மற்றும் *VPn.*

## VIII வேறு நிறுவனங்களோடு ஆவணப்படுத்தலை ஒருங்கிணைத்தல்

மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தலில் பங்கெடுக்கும் அமைப்புக்களின் இன்னுமொரு முக்கியமான உத்தி வலையமைப் புக்களை உருவாக்கி அவ்வமைப்புக்களின் ஆவணப்படுத்தலை பரந்தவொரு சூழமைவினை சென்றடைவதை உறுதி செய்வதாகும். ஆவணப்படுத்தலின் ஒருங்கிணைப்பானது நகலாக்கலை (duplication) நிவர்த்தி செய்வதுடன், நாட்டின் மனித உரிமைகள் ஆவணப்படுத்தும் நிலவரம் பாரிய இடைவெளிகள் அற்றாதாயிருக்க ஏதுவாகும்.

ஒருங்கிணைப்பிற்கான திட்டமிடலின் முதல் படியாக ஆவணப்படுத்தல் நிலவரத்தை ஆவணப்படுத்துவதன் மூலம் ஏலவே காணப்படும் ஆவணப்படுத்தலை அடையாளம் கண்டு கொள்ளலாம். அடுத்துவரும் பக்கத்தில் காட்டப்படும் கட்டமைப்பானது ஏற்கனவே காணப்படும் மனித உரிமை ஆவணங்கள், பதிவுகள், தொகுப்புகளை சேகரிக்கவும் பதியவும் உதவும்.

ஆவணப்படுத்தலின் ஒருங்கிணைப்பானது தகவல் மூலத்தை மையப்படுத்தி அமையாது. இது இரகசியத் தன்மையையும் பல்வேறுபட்ட அமைப்புக்களின் சுய அக்கறையையும் கேள்விக்குட்படுத்தலாம். மாறாக, இந்த ஒருங்கிணைப்பானது அவ்வமைப்புக்களினால் சேகரிக்கப்பட்ட/ உருவாக்கப்பட்ட ஆவணங்களையே மையப்படுத்தியதாக அமையும்.

| | A descriptive form for the collection / record accumulation |
|---|---|
| Location: | Where are the records currently located? |
| Description: | A description of the nature and content of the records, including indications of the range of document / media types, quantities of records, etc., estimated age of materials |
| Format | Indicate whether the records are physical, digital or both. |
| Created by: | Any background / contextual information about who may have been responsible for the creation of the materials contained within this collection and when they may have been created (range of years, etc) |
| Collected by: | Any background / contextual information about how the materials were brought together into this collection - who collected them and when, for what purpose, etc. |
| Copyright: | Any information available about who may hold copyright for the materials |
| Ownership | Who owns the materials or controls access to them? |
| Date accessed: | Source of assessment (ie: did you see them yourself, did someone tell you about it, who controls access, are their sensitivities etc etc) |
| Preservation issues | Any information about physical or digital materials that are in a poor condition. NB: Digital materials are often at greater risk because older formats become obsolete more quickly, or the equipment needed to access the digital records is no longer available. |
| Access issues | Any information about whether these materials can be accessed currently and by whom. |
| Security issues | Any information about possible sensitivities, potential risks of records being vanished, hidden, destroyed, including any potential risks to individuals / groups identified in records. |
| Finding aids? | Record information about any indices, registers, databases, inventories, or any metadata records that may help to find information resources within this collection. |
| Method of assessment: | How was this audit information obtained? Were the materials examined in person? Or was this information collected from another person? If so, record details of who told you, how they know about the records, when they last saw the records, etc. |
| Date and location of assessment: | Date on which the collection was accessed or described / this form was completed. |
| Assessed by: | Who completed this form? |

மூலம்: கத்தரின் கென்னடி, தென்னாபிரிக்க வரலாற்று ஆவணக் காப்பகம்

# பிற்சேர்க்கை

**ஏனைய மனித உரிமை மீறல் ஆவணப்படுத்தல் வழிகாட்டிகள்**

- Field Guide for Civil Society Documentation of Serious Human Rights Violations by PILPG http://publicinternationallawandpolicygroup.org/wp-content/uploads/2016/03/PILPG-Field-Guide-for-Civil-Society-Documentation-of-Serious-Human-Rights-Violations-1.pdf
- Documenting International Crimes in Syria: A Comprehensive Case Study Approach by Free Syrian Lawyers Association
- http://all4syria.info/wp-content/uploads/2016/02/FSLA_Internatl_Crimes_in_Syria_Report.pdf
- Community Watchdog Handbook for Community Based Activists on Documenting Human Rights Violations
- http://www.sithi.org/admin/upload/education/Documentation_Handbook_ENG_2011_12_06.pdf

**இக்கையேட்டில் குறிப்பிடப்பட்ட இலத்திரனியல் பாதுகாப்பு கருவிகள்/மென்பொருட்கள்**

- GNU Privacy Guard (Windows, Mac மற்றும் Linux) https://www.gnupg.org/
- AxCrypt (Windows ற்கு மாத்திரம்) http://www.axcrypt.net/
- TrueCrypt (பல சிவில் சமூக அமைப்புக்களால் பயன்படுத்தப்படுகின்றது) http://truecrypt.sourceforge.net/
- Security in-a-box https://securityinabox.org/en

அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையமானது தமிழ் அரசியற் சமூகத்தையும், வடக்கு - கிழக்கையும் பாதிக்கும் இலங்கையின் பொதுக்கொள்கை விடயங்கள் தொடர்பில் ஆய்வுப் பணிகளிலும், அதன் வழிவந்த செயற்பாடுகளிலும் கவனம் செலுத்தும் ஓர் புலமைத்துவ - செயற்பாட்டு மையமாகும்.

**தொடர்புகளுக்கு :**


அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்,
49, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3132
மின்னஞ்சல் : info@adayaalam.org